(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 23 PTM 206**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2024**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 75**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

**இலக்கணம் - சொல்லதிகாரம்**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1 ன.ஃ.கான் ஒற்று____________ குறிக்கும்.

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலர்பால் ஈ) பலவின்பால்

2 எனது கை என்பது,

அ) பிறிதின் கிழமை ஆ) இரட்டைக்கிளவி இ) தற்கிழமை ஈ) பெயரெச்சம்

3 விளியேற்கும் புள்ளியீறுகள் எவை?

அ) ச்,ஞ்,ட்,ண் ஆ) ன்,ர்,ல்,ள் இ) ப்,ம்,ய்.ர் ஈ) ழ்,த்,வ்,ற்

4 உயர்திணைஆண்பால் வியங்கோள் வினைமுற்றுஎது?

அ) அவன் கரியன் ஆ)அவன் வலியன் இ) அவன் செல்க ஈ) அவன் வெல்வான்

5 ஐ என்பதன் பொருள் யாது?

அ) விரைவு ஆ) கடுநட்பு இ) கூர்மை ஈ) வியப்பு

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** **(K2)**

6 பேடி – பொருள் கூறு.

7 **நிரப்புக**: வேற்றுமை உருபுகள் ________வகைப்படும்.

8 சொற்கள் பொருளுணர்த்தும் வகைகளைக் கூறுக.

9 உயர்திணைப் பலர்பால் படர்க்கைச் சொற்கள் எவை?

10 வினைத் தொகையின் இலக்கணம் யாது?

**பகுதி – ஆ** (5 x 5 = **25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) இயற் பெயரும், சுட்டுப் பெயரும் அமையும் முறையினை விளக்குக.

**(அல்லது)**

ஆ) இயற்கை, செயற்கைப் பொருள்களைக் கூறும் முறையை உரைக்கவும்.

(த.பி.பா.)

12. அ) நான்காம் வேற்றுமையின் பொருட் பாகுபாடுகளை இயம்புக.

**(அல்லது)**

ஆ) தடுமாறு தொழிற்பெயர், ஓம்படைக்கிளவி ஆகியனவற்றை விளக்கி எழுதுக.

13. அ) ரகர ஈற்றுப் பெயர்களை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சொற்கள் பொருளுணர்த்தும் முறை, வகைகள் குறித்தெழுதுக.

14. அ) வினைச்சொற்களின் வகைகளைச் சான்றுடன் தருக.

**(அல்லது)**

ஆ) இடைச்சொற்களின் பாகுபாடுகள் பற்றிஎழுதுக.

15. அ) கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களைச் சிறப்பித்தெழுதுக.

**(அல்லது)**

ஆ) இயற்சொல், திரிசொல் ஆகியனவற்றை எடுத்தியம்புக.

**பகுதி – ஆ** (5 x 8 = 40 **மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**
(K4/K5)

16. அ) திணை, பால்,வழுவமைதி பற்றிய செய்திகளைக் கட்டுரையாக்குக.

**(அல்லது)**

ஆ) வினா, விடைகள் அமையும் முறைகளைத் தொகுத்தெழுதுக.

17. அ) இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருட் பாகுபாடுகளை விவரித்தெழுதுக.

**(அல்லது)**

ஆ) ஆகுபெயரின் பாகுபாடுகளைத் தொல்காப்பியர் வழி நின்று ஆய்க.

18. அ) னகர ஈற்றுப் பெயர்களை விளிமரபு வழியாக ஆய்ந்தெழுதுக.

**(அல்லது)**

ஆ) பெயரியல் கூறும் உயர்திணைப் பெயர்களைச் சான்றுடன் விவரிக்கவும்.

19. அ) வினையியல் கூறும் எச்ச வாய்பாடுகளை நிறுவுக.

**(அல்லது)**

ஆ) இடைச்சொல் உணர்த்தும் பொருள்களைச் சான்றுடன் வகைப்படுத்துக.

20. அ) உரிச்சொற்கள் பொருளுணர்த்தும் முறையினைக் கட்டுரையாக்குக.

**(அல்லது)**

ஆ) நால்வகைப் பொருள்கோள்களைச் சான்றுடன் எடுத்துக்காட்டுக.



********